<u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6</u>

<u>மார்ச்/ ஏப்ரல்–2025, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் தனித்தேர்வர்கள் கலந்து கொள்ளுதல் குறித்த</u>

<u>செய்திக்குறிப்பு</u>

மார்ச்/ஏப்ரல்–2025 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு அறிவியல் பாட செய்முறைத் தேர்வு (Science Practical Examinations) **25.02.2025 முதல் 28.02.2025** வரையிலான நாட்களில் அறிவியல் பாட செய்முறைப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்ற பள்ளிகளிலேயே நடைபெறவுள்ளது. மார்ச்/ஏப்ரல்–2025, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுத விண்ணப்பித்துள்ள நேரடி தனித்தேர்வர்கள் மற்றும் ஏற்கனவே அறிவியல் பாட செய்முறைத் தேர்வெழுதி அத்தேர்வில் தேர்ச்சிபெறாத தனித்தேர்வர்கள், ஏற்கனவே செய்முறைப் பயிற்சி பெற்று செய்முறைத் தேர்விற்கு வருகைபுரியாத தனித்தேர்வர்கள் (அசல் செய்முறைப்பயிற்சி அத்தாட்சி சான்றிதழுடன்) மேற்படி தேதிகளில் நடைபெறவுள்ள அறிவியல் பாட செய்முறைத் தேர்வில், தேர்வர்கள் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டுடன் தவறாமல் கலந்து கொண்டு தேர்வெழுதிட அறிவிக்கப்படுகிறார்கள். அறிவியல் பாட செய்முறைத் தேர்வு நடைபெறவுள்ள தேதி குறித்து, அறிவியல் செய்முறைப் பயிற்சி பெற்ற பள்ளியிலிருந்து அறிவிப்பு ஏதும் தங்கள் முகவரிக்கு கிடைக்கப் பெறாதவர்கள், இவ்வறிவிக்கையை தெரிந்துகொண்டு, அறிவியல் பாட செய்முறைத் தேர்வில் தவறாமல் கலந்து கொள்ளும் பொருட்டு, அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரை அணுகுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**ஓம்/–**
**இயக்குநர்**

**இடம்:** சென்னை – 600 006
**நாள் :** 29.01.2025